(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 4(4).]**

# பாராளுமன்றத்தின் 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 ஆகஸ்ட் 07, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2026 ஆகஸ்ட் 18, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 ஜூலை 10 ஆம் திகதிய 2496/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

தொழில் அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் அமைச்சருக்கு பின்வருமாறு கட்டளையிடுவதற்காக இப்பாராளுமன்றத்தினால் இதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்படுமாக :—

(அ) 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட, 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, சிரம வாசனா நிதியம் எனப்படும் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட சிரம வாசனா நிதியத்தைக் கலைத்தல்; மற்றும்

(ஆ) 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட, 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, சிரம வாசனா நிதியம் எனப்படும் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட அரச நிறுவனமான சிரம வாசனா நிதியத்தை, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் பிரகாரம் கணக்குகளைத் தீர்த்து மூடிவிடும் காரியத்திற்காக, கலைப்பாளராக அல்லது கலைப்பாளர்களாக ஏதேனும் ஒரு நபரை அல்லது நபர்களை நியமித்தல்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

## 2026 ஆகஸ்ட் 21, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2026 செப்தெம்பர் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1190/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தை நிர்மாணிக்கும் பணிகள் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, இன்றளவிலும் அந்த மைதானம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பயன்பாட்டுக்காக ஒப்படைக்கப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தை எந்த வகைப்பாட்டுக்கு உரிய விளையாட்டு மைதானமாக நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அந்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக, இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) கடந்த 10 ஆண்டுகளில், இந்நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(v) அந்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக இதுவரை ஒப்பந்தம் செய்துள்ள ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) தற்போது நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக அந்த மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு யாதென்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1528/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணினிகள், பல்லூடக எறிவைகள், சூட்டிகைப் பலகைகள் போன்ற சாதனங்களை பழுதுநீக்குவதில் பெரும்பாலான பாடசாலைகள் சவால்களை எதிர்கொள்வதை அறிவாரா என்பதையும்;

(ii) பாடசாலைகளில் காணப்படும் இலத்திரனியல் சாதனங்கள் பழுதடையும் போது அவற்றை பழுதுநீக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(iii) வட மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் இலத்திரனியல் சாதனங்களில் பழுதடைந்துள்ள சாதனங்களின் வீதம் வலய வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி மாகாணத்தின் சில வலயங்களில் காணப்படும் தகவல் தொழில்நுட்பப் பாடத்துக்கான ஆசிரியர் பற்றாக்குறையால் வலய மட்ட தொழில்நுட்பக் குழுவை வினைத்திறனுடன் ஈடுபடுத்த முடியாதிருப்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாடசாலைகளிலுள்ள கணினி வன்பொருள்களை பழுதுநீக்குவதற்கு கடந்த 05 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை மாகாண வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) அத்தொகை பாடசாலைகளின் கணினி வன்பொருள் பழுதுநீக்க நடவடிக்கை களுக்கு போதுமானதா என்பதையும்;

(iii) பாடசாலைகளின் கணினி வன்பொருள் பழுதுநீக்க நடவடிக்கைகளுக்கு நிலையானதொரு திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1645/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுருக்கு வலை மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் படகுகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் தாமதம் நிலவுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி தாமதத்தின் காரணமாக குறிப்பிட்ட காலத்தில் மாத்திரமே பிடிக்கக் கூடிய மீன்களை பிடிக்க முடியாதுள்ளது என்பதையும்;

(iii) அனுமதிப் பத்திரங்களின்றி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்கள், அவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள் மற்றும் படகுகளுடன் கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள உத்தியோகத்தர்களினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவதையும், அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் உரிய காலத்தில் அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1660/2025

கௌரவ சானக மாதுகொட,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிலுள்ள சதொச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் மூடப்பட்ட சதொச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் ஒட்டுமொத்த சதொச விற்பனை வலையமைப்பு பெற்றுக் கொண்ட இலாபம் மற்றும் அதன் செலவினம் ஒவ்வொரு மாதத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காலி மாவட்டத்தின், கராபிட்டிய சதொச விற்பனை நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1740/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004.12.26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவின் காரணமாக பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்கள் வீடுகளை இழந்தார்கள் என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற அமைப்புக்களினாலும் தனியார் காணிகளில் மற்றும் அரச காணிகளில் மாற்று வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி மாற்று வீடுகள் சர்வோதயபுரம், செங்காமம், ஹிஜ்ரா நகர், கனகர் கிராமம், கோமாரி 1 மற்றும் கோமாரி 2 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள அரச காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 18 வருடங்களைக் கடந்துள்ள போதிலும் இதுவரையில் அந்த மக்களுக்கு உரிய காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படாதுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு துரிதமாக காணி உறுதிகளை வழங்குவதற்கு எடுத்துள்ள அல்லது எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1827/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வீதி விபத்துகள் காரணமாக வருடமொன்றிற்கு இடம்பெறுகின்ற மரணங்களின் எண்ணிக்கை மற்றும் காயமடைபவர்களின் சராசரி எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி விபத்துகள் காரணமாக தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் அங்கவீனமடையும் நபர்களின் சராசரி எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) விபத்துகளில் காயமடைபவர்களுக்காக ஆண்டொன்றிற்கு ஒதுக்கப்படும் கட்டில்களின் எண்ணிக்கை மற்றும் கட்டில்களை பயன்படுத்தும் நாட்களின் ஆகியவற்றின் சராசரி எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) வீதி விபத்துகளுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக வருடமொன்றுக்குச் செலவாகும் தொகை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1911/2026

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி டிப்போக்களுள் இலாபம்/நட்டமடைந்து வரும் டிப்போக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது அந்த ஒவ்வொரு டிப்போவுக்கும் சொந்தமாகக் காணப்படும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு உகந்த நிலையிலுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போக்களிலும் உள்ள ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேலே (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்போக்களை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2092/2026

கௌரவ சுனில் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள ‘கெமிதிரிய’ கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது இயங்கும் கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் இயங்குகின்றதும் இயங்காததுமான கம்பனிகளின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், நிதிச் சொத்துக்களின் பொறுப்பு யார் வசமுள்ளது என்பதையும்;

(iv) அத்தகைய கம்பனிகளில் சொத்துக்களும் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுகின்றனவா;

(v) அவ்வாறாயின், அந்தக் கணக்காய்வுக்கான அதிகாரி யார் என்பதையும்;

(vi) மேற்படி கம்பனிகளது அலுவலர்களின் முறைகேடுகளுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2236/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் மீன்பிடி துறைமுகமாகவும் வணிகத் துறைமுகமாகவும் செயற்படுத்தும் நோக்கத்துடன் 'ஒலுவில் துறைமுகம்' நிறுவப்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி துறைமுகம் நிறுவப்பட்டு தொழிற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளுக்கு நிதி உதவி அளித்த நாடு யாதென்பதையும்;

(iv) அதன் நிர்மாணப் பணிகளுக்கு செலவிடப்பட்ட முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) துறைமுகத்தின் முகத்துவாரத்தில் மணல் தேங்கியமையினால் அதன் நடவடிக்கைகள் கைவிடப்படுவதற்கு முன்னதாக, அது வினைத்திறனுடன் இயங்கிய காலப்பகுதி யாதென்பதையும்;

(vi) மேற்படி துறைமுகம் எவ்வளவு காலமாக செயலிழந்து காணப்படுகின்றதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) துறைமுகம் இயங்கிய ஆரம்பக்காலத்தில் அதன் மூலம் பயனடைந்த மீனவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்பொழுது அதன் மூலம் பயனடைகின்ற மீனவர்கள் உள்ளார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த மீனவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி துறைமுகத்தை தேசிய மீன் உற்பத்திக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பங்களிப்பு வழங்கக்கூடிய வகையில் புனரமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2267/2026

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ. டி. சூரியபண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சுக்கு சொந்தமான அச்சகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அச்சகங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதுடன், அவற்றின் தற்போதைய செயற்பாட்டு நிலை யாதென்பதையும்;

(iv) செயற்பாட்டு நிலையில் இல்லாத அச்சகங்கள் இருப்பின், அவற்றை மீண்டும் செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவருவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி அச்சகங்களை மீண்டும் செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவருவதன் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது செயற்பாட்டு நிலையில் உள்ள அச்சகங்களினால் மேற்கொள்ளப்படும் பணிகள் யாவையென்பதையும்;

(ii) அமைச்சின் கீழ் அச்சகங்கள் காணப்படுவதன் காரணமாக அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெறும் நன்மைகள் யாவையென்பதையும்;

(iii) அச்சகங்களை நவீனமயப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, செப்தெம்பர் 08, செவ்வாய்க்கிழமை)**

2166/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ‘தித்வா’ சூறாவளியினால் சேதமடைந்த அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதத்தின் தன்மை மற்றும் மதிப்பிடப்பட்ட சேதம்;

(iii) மேற்படி பாடசாலைகளின் சேதங்களைச் சீர்செய்வதற்கும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் இன்றளவில் அரசாங்கம், அமைச்சு, மாகாண சபைகள், வெளிநாட்டு உதவித் திட்டங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள்;

(iv) மேற்படி நிதி ஒதுக்கீடுகளின் மூலம் முழுமையாகப் புனரமைக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை;

(v) இன்றளவில் முழுமையாகத் திருத்தப்படாத அல்லது புனரமைக்கப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கை;

மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) திருத்தப்படாத அல்லது புனரமைக்கப்படாத பாடசாலைகளைச் சீர்செய்வதற்குத் தேவையான மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2183/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் பண்டாரகமவில் அமைந்துள்ள ‘களுத்துறை மாவட்ட விளையாட்டு கட்டிடத் தொகுதிக்கு” அருகில், முன்னர் ‘பண்டாரகம வாராந்த சந்தை’ இயங்கிய வளாகத்தில் கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வளாகத்தினுள் கழிவுகளைச் சேகரிக்கும் பணியை மேற்கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வளாகத்தினுள் கழிவு சேகரிப்பு மையமொன்றைப் பராமரித்துச் செல்வதற்குத் தேவையான அனுமதிகள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கழிவு சேகரிக்குமிடத்திலிருந்து —

(i) பண்டாரகம உள்ளக விளையாட்டரங்கிற்கான தூரம்;

(ii) பண்டாரகம நீச்சல் தடாகத்திற்கான தூரம்;

(iii) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான வளாகத்திற்கான தூரம்;

(iv) திறந்தவெளி உடற்பயிற்சி மையத்திற்கான தூரம்;

யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சட்டவிரோதமான முறையில் பராமரிக்கப்பட்டு வரும் இக்கழிவு சேகரிப்பு மையம் காரணமாக, பண்டாரகம உள்ளக விளையாட்டு அரங்கில் பயிற்சிகளை மேற்கொள்ளும் தேசிய வலைப்பந்தாட்டக் குழுவினர் உட்பட அவ்விளையாட்டு அரங்கைப் பயன்படுத்தும் விளையாட்டு வீரர்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகக் கிடைத்த அறிவித்தல்களுக்கு அமைய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2184/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை, பெல்லன, எகொடவத்த வீதியில் வசிக்கும் பீ.வி. விஜேசிறி உள்ளிட்ட சிலரால், 'பரம்பரை பரம்பரையாக வயற்காணிகளுக்குச் செல்வதற்காக பயன்படுத்திய பாதையில் தடை ஏற்படுத்தியமை' தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கமைய, 2011ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்கக் கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 90(1)ஆம் பிரிவின் பிரகாரம், களுத்துறை கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரால் 2024.11.07ஆந் திகதிய DAD/KL/L/04/පරි/2024ஆம் இலக்கக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) தற்போதுவரை மேற்படிக் கட்டளை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் அதனை செயல்வலுப் பெறச்செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(iii) இப்பிரதேச விவசாயிகளின் தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் மேற்படி விவசாயப் பாதையின் குறுக்கே கபில கன்னங்கர என்பவரால் சட்டவிரோதமான முறையில் பலவந்தமாக அமைக்கப்பட்ட வாயிற்கதவையும், வேலியையும் துரிதமாக அகற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 செப்தெம்பர் 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2114/2026

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக நிறுவப்பட்ட பிரதேச செயலகங்களில் பணியாட்டொகுதியினரின் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி அலுவலகங்களில் போதுமானளவு கட்டட வசதிகளின்மையால் பொதுமக்கள் பாரிய சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) ஒரு கிராம சேவகர் பிரிவிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சேவைகளைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின், மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் , ஏன்?

2122/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வங்கி நடவடிக்கைகளின் போது கட்புலனற்ற நபர்களின் நிதி இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்காக குரல் வழிகாட்டல் கொண்ட தானியங்கி காசளிப்பு இயந்திரங்கள் (ATM) மற்றும் பிரெய்லி விசைப்பலகைகளைத் தாபிக்குமாறு இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தல் வழங்கியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) வங்கிகளின் கைத்தொலைபேசிச் செயலிகள் மற்றும் இணையத்தளங்கள் சர்வதேச இணைய உள்ளடக்க அணுகல் வழிகாட்டல்களுக்கு இணங்க அமைந்திருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இத்தொழில்நுட்ப மற்றும் செவிப்புல வசதிகளை அனைத்து அரச மற்றும் தனியார் வங்கிகளிலும் தாபிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு குறிப்பிட்ட காலச்சட்டகத்தைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை மத்திய வங்கியினால் நிதிசார் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக விடுக்கப்படும் கட்டளைகள், வங்கிகளினால் நடைமுறைப்படுத்தப்படுவது சம்பந்தமாக உரிய முறையில் இசைவுக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றனவா என்பதையும்;

(ii) வாடிக்கையாளர் சமவாயங்களை மீறும் வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) வங்கிக் கட்டமைப்பினுள் அநீதிகளுக்குள்ளாகும் மாற்றுத்திறனாளி நபர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியின் கீழ் 'விசேட வாடிக்கையாளர் நிவாரணப் பொறிமுறையொன்றை' தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2126/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்திலுள்ள, பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், பதிவு செய்யப்படாத கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மாகாணத்தினுள் காணப்படும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட்ட மற்றும் வைப்புக்காப்புறுதித் திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட்ட மற்றும் உள்வாங்கப்படாத கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) 2025.12.31ஆம் திகதியன்று மாகாணத்தினுள் காணப்படும் கூட்டுறவு வங்கிகளின் வைப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் வைப்புத்தொகை எவ்வளவென்பதையும்;

(vi) அத்திகதியன்று வைப்பாளர்களின் பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்குத் தவறியுள்ள கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை மற்றும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(vii) மேற்படி வங்கிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வைப்புகள் மற்றும் கடன்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காகத் துரித நடைமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்குறிப்பிட்ட நடைமுறைகள் யாவையென்பதையும்;

(iii) பதிவு செய்யப்படாத, இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படாத கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அக்குறிப்பிட்ட சங்கங்களில் ஊழல்களையும் முறைகேடுகளையும் புரிந்த முகாமைத்துவத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2195/2026

கௌரவ ஜே. சீ. அலவத்துவல,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிரேஷ்ட பிரஜைகளின் 1.5 மில்லியன் ரூபா நிலையான வைப்பிற்காக 15% வட்டி விகிதம் வழங்கப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) 2025.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிகளில், சிரேஷ்ட பிரஜைகளினது ஒரு மில்லியன் ரூபா நிலையான வைப்பிற்காக நடைமுறையிலுள்ள வட்டி விகிதத்திற்கு மேலதிகமாக 3% வட்டி விகிதத்தை வழங்க முன்மொழியப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இந்த மேலதிக 3% வட்டிச் சலுகையானது, 2025.12.31 ஆம் திகதியின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையான வைப்புகளுக்கு சிரேஷ்ட பிரஜைகளுக்கு கிடைக்காததை அறிவாரா என்பதையும்

(iv) 2025.12.31 ஆம் திகதியின் பின்னர் சிரேஷ்ட பிரஜைகளுக்கான வயதினைப் பூர்த்திசெய்யும் ஆட்களுக்கும் அரசாங்க அலுவலர்களுக்கும் இந்த வட்டி விகிதம் கிடைக்காததால், இவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கவனத்தில்கொண்டு இவர்களுக்கும் அந்த வட்டிச் சலுகையை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) தற்போது இந்த வட்டிச் சலுகையின் கீழ் நிலையான வைப்புகளைப் பேணி வருகின்ற வைப்பாளர்களின் வைப்புக் காலம் முடிவுக்கு வந்த பின்னரும் குறித்த வட்டிச் சலுகையை தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2232/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு நகரத்திற்காக முன்மொழியப்பட்டிருந்த இலகு புகையிரதப் போக்குவரத்துத் திட்டத்திற்குப் பதிலாக மெட்ரோ பேருந்து சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iii) அத்தகையதொரு தீர்மானத்தை எட்டுவதற்கு முன்னர், மெட்ரோ பேருந்து சேவை மற்றும் இலகு புகையிரதப் போக்குவரத்துத் திட்டம் ஆகியவற்றை ஒப்பிட்டு நோக்குவதற்காக இயக்கச் செலவு, பயணிகள் கொள்ளளவு, தேவைப்பாடு, அரச முதலீடு மற்றும் மானியங்கள் உள்ளடங்கலாக மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்ப, நிதி, பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூகப் பகுப்பாய்வுகளும் மதிப்பீடுகளும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி முன்மொழிவு சம்பந்தமாக இலகு புகையிரதப் போக்குவரத்துத் திட்டத்திற்கு நிதியளிப்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்த நிதி நிறுவனங்களுடன் அரசாங்கம் கலந்துரையாடியுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி நிதி நிறுவனங்களின் பதிலிறுப்புகள் யாவையென்பதையும்;

(vii) முன்மொழியப்பட்டுள்ள மெட்ரோ பேருந்து சேவையானது, தற்போதுள்ள தேசியப் போக்குவரத்து முதன்மைத் திட்டத்தின் அல்லது இற்றைப்படுத்தப்பட்ட நகர்ப்புறப் போக்குவரத்து உத்தியின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, செப்தெம்பர் 09, புதன்கிழமை)**

2202/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சித்த மருத்துவப் பட்டதாரிகளுக்கு கட்டாய உள்ளகப் பயிற்சிக்காக, அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆயுர்வேத மருத்துவமனைகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) உள்ளகப் பயிற்சி வசதிகளைக் கொண்ட ஒவ்வொரு மருத்துவமனைக்கும் 2021 முதல் 2025 வரையான ஒவ்வொரு ஆண்டிலும் அனுமதிக்கப்பட்டுள்ள சித்த மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகங்களில், சித்த மருத்துவப் பட்டதாரிகளுக்கு உள்ளகப் பயிற்சி வசதிகளை வழங்குவதற்கான வசதிகள் இல்லாத மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி மாவட்டங்களில் அமைந்துள்ள எந்தவொரு ஆயுர்வேத மருத்துவமனையிலும் உள்ளகப் பயிற்சி வசதிகள் காணப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2203/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளின் கட்டாய உள்ளகப் பயிற்சிக்காக, அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளின் பெயர்கள் மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) அத்தகைய உள்ளகப் பயிற்சி வசதிகளைக் கொண்ட ஒவ்வொரு மருத்துவமனையிலும் அனுமதிக்கக்கூடிய சித்த, ஆயுர்வேதம் மற்றும் யூனானி பட்டதாரி மாணவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) உள்ளகப் பயிற்சிக்குத் தேவையான வசதிகள் இல்லாத மாவட்டங்களில் அமைந்துள்ள ஆயுர்வேத மருத்துவமனைகளை அத்தகைய வசதிகளைக் கொண்டதாக மேம்படுத்துவதற்கு, குறுகிய கால அல்லது நீண்ட காலத் திட்டங்களை அமைச்சு தயாரித்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திட்டங்களின் விபரங்கள் யாவை என்பதையும்;

(v) இதுவரை அத்தகைய திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) இதுவரை உள்ளகப் பயிற்சிக்குத் தேவையான வசதிகள் இல்லாத மாவட்டங்களில் குறைந்தபட்சம் ஒரு ஆயுர்வேத மருத்துவமனையிலேனும் 2027 ஆம் ஆண்டிற்குள் அத்தகைய வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(vii) இன்றேல், ஒவ்வொரு மாவட்டத்திலும் அத்தகைய வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தேவைப்படும் காலக்கெடு, எதிர்பார்க்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தும் செயன்முறைகள் தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2204/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இயங்குகின்ற ஆயுர்வேத மருத்துவமனைகளில், உள் நோயாளர் பிரிவுகளைக் கொண்ட மற்றும் உள் நோயாளர் பிரிவுகளைக் கொண்டிராத கிராமிய ஆயுர்வேத மருத்துவமனைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) உள் நோயாளர் பிரிவுகளைக் கொண்டிராத கிராமிய ஆயுர்வேத மருத்துவமனைகளுக்கு இதுவரை அந்த வசதிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் தரநிலைகளின்படி, கிராமிய, மாவட்ட மற்றும் ஆதார ஆயுர்வேத மருத்துவமனைகளில் காணப்பட வேண்டிய நோயாளர்களுக்கான கட்டில்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு ஆயுர்வேத மருத்துவமனைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நோயாளர் கட்டில்களின் எண்ணிக்கை, மருத்துவமனை வாரியாக வெவ்வோறாக யாதென்பதையும்;

(v) அரசாங்கத்தின் தரநிலைகளின் படி கிராமிய, மாவட்ட மற்றும் ஆதார ஆயுர்வேத மருத்துவமனைகளில் சேவையாற்ற வேண்டிய சித்த மருத்துவர்கள் மற்றும் சித்த மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை முறையே யாதென்பதையும்;

(vi) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள ஆயுர்வேத மருத்துவமனைகளில் தற்பொழுது சேவையாற்றுகின்ற ஆயுர்வேத மருத்துவர்கள் மற்றும் ஆயுர்வேத மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மருத்துவமனை வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(vii) மேற்படி மாகாணங்களில் இதுவரை மாகாண ஆயுர்வேத மருத்துவமனை ஒன்று நிறுவப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 செப்தெம்பர் 10, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

33/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை விளையாட்டு எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) விளையாட்டு வீரர்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு மற்றும் அதன் சதவீதம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) விளையாட்டு வீரர்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் நிதியின் அளவை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

140/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 செத்தெம்பர் 30ஆம் திகதியன்று வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட 500 மில்லியன் ரூபா பெறுமதியான பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக விசேட கணக்காய்வு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பெறுகையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி பெறுகைக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி விதப்புரைகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1413/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புதிய அஞ்சல் அலுவலகக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக அல்லது புனரமைப்பதற்காக இவ்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) கிரான் அஞ்சல் அலுவலகம் தனியார் கட்டடமொன்றில் இயங்குவதை அறிவாரா என்பதையும்;

(iii) கிரான் அஞ்சல் அலுவலகத்திற்கென புதிய கட்டடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவுக்குரிய மாவடிவேம்பு பிரதேசத்தில் அஞ்சல் அலுவலகமொன்று இல்லாத காரணத்தால் முதியோர்கள் மற்றும் விதவைகள் சித்தாண்டி உப அஞ்சல் அலுவலகத்திலிருந்தே அவர்களுடைய கொடுப்பனவுகளைப் பெறுகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மாவடிவேம்பு பிரதேசத்தில் புதிய அஞ்சல் அலுவலகக் கட்டடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) உப அஞ்சல் அலுவலகமொன்றை அஞ்சல் அலுவலகமாகத் தரமுயர்த்துவதற்கு பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2096/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொணராகலை மாவட்டத்தில், மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவின் கல்கமுவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பைலேகந்த குளத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி உத்தேச கருத்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த செலவு எவ்வளவென்பதையும்;

(iii) அரசாங்கத்தினால் கருத்திட்டத்திற்கு ஏற்கனவே நிதி செலவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஏற்கனவே செலவிடப்பட்டுள்ள மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த கட்டுமானப் பணிகளில் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2189/2026

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'தேசிய பாதுகாப்பு நிதியம்' நிறுவப்பட்டதன் நோக்கங்கள், அதன் சட்டப் பின்னணி, மற்றும் அமைப்புருவாக்கம் என்பன யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்திற்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்படும் முறையும், அதற்குத் தேவையான தகைமைகளும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிதியத்திற்கு நிதி கிடைக்கப் பெறும் முறை மற்றும் அதன் தற்போதைய அங்கத்தவர்கள் யாவரென்பதையும்;

(iv) புதிய அங்கத்தவர்கள் நியமிக்கப்படும் முறை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிதியத்தால் கடந்த தசாப்தத்தில் வழங்கப்பட்ட சேவைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிதியம் உள்ளக / அரச கணக்காய்வுக்குட்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு, பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல் , இறுதியாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(v) வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2026 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா மற்றும் அதற்கென அமைச்சின் நிருவாக உத்தியோகத்தரொருவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) மேற்படி நிதியத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் சம்பந்தமாக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2192/2026

கௌரவ ருவன் விஜேவீர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பாடசாலையொன்றில் ஆசிரியராக நியமனம் பெறுவதற்கான அடிப்படைத் தகைமையாகக் கல்விமாணிப் பட்டம் கருதப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி பட்டப்படிப்பினை நிறைவு செய்தபோதும், இதுவரை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்க்கப்படாத அரச மற்றும் தனியார் பட்டதாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2194/2026

கௌரவ ரவீந்திர பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் பாராளுமன்றத்தின் சபை மண்டபத்தில் உபயோகத்திற்காக வழங்கப்படுகின்ற ஹன்சாட் அறிக்கைகள், நிகழ்ச்சி நிரல் மற்றும் ஏனைய எழுத்தாவணங்களை அச்சிடுவதற்காக ஆண்டுதோறும் செலவாகும் தொகை யாதென்பதையும்;

(ii) அந்த ஆவணங்களை டிஜிட்டல் ஊடகத்தின் வாயிலாக வழங்குவதன் மூலம் காகிதப் பயன்பாட்டைக் குறைப்பதற்கு அல்லது முற்றிலும் தவிர்ப்பதற்கு ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அந்த வேலைத்திட்டத்தை நிறைவுசெய்யத் திட்டமிட்டுள்ள திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2205/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுயாதீன அரசாங்க வழக்குத் தொடருநர் அலுவலகத்தை நிறுவுவதன் அவசியத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், இவ்வலுவலகத்தை நிறுவுவதற்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படவிருக்கின்ற பணிப்பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iv) இவ்வலுவலகத்தை நிறுவுவதற்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2247/2026

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேலைத்தேய மருத்துவர்களையும் ஆயுர்வேத மருத்துவர்களையும் பொதுச்சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான வழிமுறைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) சுதேச மருத்துவத் துறைக்குச் சொந்தமான முக்கிய பிரிவுகள் யாவையென்பதையும்;

(iii) மேலைத்தேய மருத்துவர்களுக்கும் ஆயுர்வேத மருத்துவர்களுக்கும் வழங்கப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேலைத்தேய மருத்துவர்களுக்கும் ஆயுர்வேத மருத்துவர்களுக்கும் வழங்கப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி முரண்பாடுகளைக் குறைப்பதற்கும் சுதேச மருத்துவத் துறையை ஒழுங்குறுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2269/2026

கௌரவ ருவன் மாபலகம,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 2025ஆம் மற்றும் 2026ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கம்பஹா மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி மாவட்டத்தில் 2027ஆம் ஆண்டு தொடக்கம் 2029ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு வீட்டு அலகிற்கும் வழங்கப்படும் உதவித் தொகை யாதென்பதையும்;

(v) வீட்டிற்கான உதவித் தொகையை வழங்குவதற்கு பயனாளிகளைத் தெரிவு செய்யும் அளவுகோல்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, செப்தெம்பர் 10, வியாழக்கிழமை)**

2253/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள வைத்தியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியர்களுள், பாரம்பரிய வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் பொது மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) பாரம்பரிய மருத்துவர்களின் குறிப்பிட்ட மருத்துவப் பரம்பரைகள் பற்றிய தகவல்களை மருத்துவ சபை அடையாளம் கண்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அடையாளம் காணப்பட்டுள்ள மருத்துவப் பாரம்பரைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) கடந்த அரசாங்கங்களின் கீழ், மருத்துவப் பரம்பரைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கு விசேட கருத்திட்டமொன்றுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அக்கருத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதித்தொகை எவ்வளவு என்பதையும்;

(vii) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(viii) அக்கருத்திட்டத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லையெனில், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் நிலை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2254/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக இந்தியாவுடன் மின்சாரம், டிஜிட்டல், எரிபொருள் குழாய்வழி மற்றும் போக்குவரத்துத் தொடர்புகளை மேம்படுத்திக்கொள்வது பொருத்தமானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அதற்காக, 2025.04.05 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த திகதியில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றின் மூலமும் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் அடிப்படை நோக்கங்கள் மற்றும் இலக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையேயான பாக்கு நீரிணையில் மூலோபாய உட்கட்டமைப்பு வசதிகள் வழித்தடத்தின் நிர்மாணப் பணிகளில் இதுவரை அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) ஒரு பகுதி மேம்பாலமாகவும், எஞ்சிய பகுதி கடலடிச் சுரங்கப்பாதையாகவும் கொண்ட ஒரு நேரடி இணைப்பை ஏற்படுத்துவது குறித்து இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே இன்றளவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அக்கருத்திட்டத்தின் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கிடைக்கின்ற இருதரப்பு நன்மைகள் யாவையென்பதையும்;

(iv) அக்கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2255/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலையை வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்வதற்காக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி ஒப்பந்தத்தின் மூலம் ஈடேற்றிக் கொள்வதற்கு உத்தேசிக்கும் அடிப்படை நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கால வரையறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் -

(i) இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல்வேறு உற்பத்தி சார்ந்த எரிபொருள் குழாய்த் தொகுதியை நிறுவுவது குறித்து இதுவரையில் அடைந்துள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) திருகோணமலை எண்ணெய் குதங்கள் வளாகங்களை அபிவிருத்தி செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) திருகோணமலை பிரதேசத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை அமைப்பது தொடர்பாக இதுவரையில் அடைந்துள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2026 செப்தெம்பர் 11, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

200/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் இந்த போகத்தில் உர மானியத்தைப் பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு கமநல சேவைப் பிரிவுகளின் படி மேற்படி எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி உர மானியத்திற்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மானியத்தை சரியாகவும் முறையாகவும் வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

370/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, முழுநேர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை, கல்விசாரா பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை மற்றும் இலங்கைப் பிரசைகள் அல்லாத மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் இளமாணிப் பட்ட கற்கைநெறிகள் மற்றும் பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகள் யாவையென்பதையும்;

(iii) பல்கலைக்கழகத்தை நடாத்திச் செல்வதற்கு கடந்த 05 வருட காலப்பகுதியினுள் ஆண்டுவாரியாக அரசாங்கம் வழங்கிய பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) கட்டணம் அறவிடப்படுகின்ற கற்கைநெறிகளின் மூலம் இதுவரை ஈட்டப்பட்ட மொத்த வருமானம், பல்கலைக்கழகத்தின் மொத்த செலவினத்தின் சதவீதமாக யாதென்பதையும்;

(v) பல்கலைக்கழகத்தை மேலும் மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

664/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2021ஆம் ஆண்டு முதல் இதுவரையில் —

(i) இந்நாட்டின் நுகர்வுக்குத் தேவையான மொத்த மின்சாரத்தின் அளவு;

(ii) நீர் மின்சாரம், நிலக்கரி, டீசல், சூரிய வலுசக்தி மற்றும் காற்று மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட மின்சாரத்தின் அளவு;

ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2024 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் —

(i) தனியார் டீசல் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மின்சாரத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) தனியார் சூரிய சக்தி உற்பத்தி மூலம் (வீடுகள் உட்பட) பெற்றுக்கொள்ளப்பட்ட மின்சாரத்தின் அளவு யாதென்பதையும்;

ஆண்டு வாரியாக வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சூரிய மற்றும் காற்று வலுசக்தியைக் கொண்டு மேற்கொள்ளப்படும் மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(ii) மின் உற்பத்தி மிகையாகவுள்ள சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றனவா;

(iii) ஆமெனில், மேற்படி மிகையான மின்சாரத்தை முகாமைத்துவம் செய்வதற்கான வேலைத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

685/2025

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற கருத்திட்டத்தின் கீழ் வட மத்திய மாகாணத்தின் அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிர்மாணப் பணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படிக் கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படிக் கருத்திட்டங்களில் தற்போது இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படிக் கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படிக் கருத்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

987/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மத்திய கலாசார நிதியமானது ஆண்டுதோறும் ஈட்டியுள்ள வருமானம் மற்றும் மேற்கொண்டுள்ள செலவு ஆகியன ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) அந்நிதியத்தின் மூலம் தொல்லியல் இடங்களை பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் தேசிய மரபுரிமைகள் பிரிவுக்கு செலுத்துவதற்குள்ள நிதித் தொகை யாதென்பதையும்;

(iii) அந்நிதித் தொகையைச் செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அந்நிதித்தொகையை விரைவில் செலுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2231/2026

கௌரவ பத்மசிரி பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சில் தற்போது சேவையாற்றி வருகின்ற சுகாதார கனிஷ்ட சிற்றூழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி காலப்பகுதியில் மிக அதிகமாக சுகாதார கனிஷ்ட சிற்றூழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஆண்டுகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2026 ஆம் ஆண்டு சுகாதார கனிஷ்ட சிற்றூழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பொலன்னறுவை மற்றும் பதுளை மாவட்டங்கள் உள்ளீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) அதன் காரணமாக மேற்படி இரண்டு மாவட்டங்களுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2261/2026

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும் ;

(ii) மேற்படி மன்றத்திற்கு பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்;

(iii) அப்பணிப்பாளர் சபையை முதலில் நியமித்தவர் யாரென்பதையும்;

(iv) மேற்படி மன்றத்தின் முதலாவது தலைவர் யாரென்பதையும்;

(v) பணிப்பாளர் சபையின் முதலாவது கூட்டம் நடாத்தப்பட்ட திகதி மற்றும் அக்கூட்டத்தில் பங்குபற்றிய அங்கத்தவர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இம்மன்றத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தை நடாத்துவதற்கு தேவையான கூட்ட நடப்பெண் யாதென்பதையும்;

(ii) மேற்படி மன்றத்தின் பணிப்பாளர் சபை எத்தனை தடவைகள் கூடியுள்ளது என்பதையும்;

(iii) அக்கூட்டங்கள் நடாத்தப்பட்டத் திகதிகள் யாவையென்பதையும்;

(iv) பணிப்பாளர் சபையினால் நடாத்தப்பட்ட கூட்டங்கள் பற்றிய எழுத்து மூலமான அறிக்கைகள் இருப்பின், அவ்வறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி மன்றம் தொடர்பாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருடாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) மேற்படி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட வருடங்கள் யாவையென்பதையும்;

(vii) வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லையெனின், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2262/2026

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபை, இந்திரா டிரேடர்ஸ் (தனியார்) நிறுவனத்தினூடாக இறக்குமதி செய்துள்ள 'தாழ் தளச்' சொகுசு பொடோன் பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பேருந்துக் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் கொள்வனவுக் கட்டளை விடுக்கப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இரண்டாம் கட்டத்தில் கொள்வனவுக் கட்டளை விடுக்கப்பட்டுள்ள பேருந்துகளின் விலை, முதற்கட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பேருந்துகளின் விலைக்குச் சமமானதா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி விலை வேறுபடுகின்றதா என்பதையும்;

(v) மேற்படி பேருந்துகள் நகர்ப்புறப் பகுதிகளில் இயங்குவதற்காக வீதிகளில் ஈடுபடுத்தப்படுமா என்பதையும்;

(vi) இன்றேல், கிராமப்புற வீதிகளில் இயக்கத்திற்கு விடப்படுமா என்பதையும்;

(vii) மேற்படி பேருந்துகள் நகர்ப்புற வீதிகளில் இயக்கத்திற்கு விடப்படுமாயின், கிராமப்புற வீதிகளுக்கு இயக்கத்திற்கு விடப்படும் பேருந்துகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2264/2026

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள விவசாய உற்பத்திப் பெறுமதிசேர் மையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேசச் செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் தேவையான மையங்களின் எண்ணிக்கை அடையாளங் காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வெண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(i)இல் குறிப்பிடப்பட்ட மையங்களில் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நிலவுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2268/2026

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வாழ்கின்ற 'விசேட தேவைகளையுடைய' பிள்ளைகளின் கல்வி உரிமைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு, அரசாங்கப் பாடசாலைக் கட்டமைப்பின் கீழ் தனியான 'விசேட கல்வி அலகுகள்' நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்போது நாடு முழுவதிலுமுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் இயங்கி வரும் விசேட கல்வி அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி அலகுகளின் ஊடாக கல்வி பயின்று வரும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விசேட கல்வி அலகுகளுக்குத் தேவையான விசேட கற்றல் உபகரணங்கள், இயன்முறை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானளவில் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் தொழில்சார் பயிற்சியை மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) விசேட தேவைகளையுடைய பிள்ளைகள், ஏனைய சாதாரணப் பிள்ளைகளுடன் இணைந்து கல்வி கற்கும் உள்ளடங்கல் கல்வி என்ற எண்ணக்கருவை மேம்படுத்துவதற்காக எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் யாவை என்பதனை அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 4/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி ,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர் களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச்சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2025

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப்படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— நுண் நிதிக் கடன்களைப் பெற்று அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நுண் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுள் பெருமளவானவர்கள் தற்போது அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களாக இருப்பதனால், மேற்படி நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/2025

கௌரவ உபுல் கித்சிறி,— உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— உடவளவை தேசியப் பூங்கா, உடவளவை யானைகள் சரணாலயம், சங்கபால ரஜமகா விகாரை, உடவளவை நீர்த்தேக்கம், செவனகல சீனித் தொழிற்சாலை, செவனகல கரும்பு ஆராய்ச்சி நிலையம், உடவளவை நன்னீர் மீன்பிடி நிலையம் மற்றும் வவுல்பன சுண்ணாம்புக்கல் குகை முதலிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் காணப்பட்ட போதிலும், முறையான ஒரு வேலைத்திட்டம் இன்மையாலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றின் பெறுமதியைக் கண்டுகளிக்க முடியாதிருப்பதாலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் செவனகல ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— “இலங்கை பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக “பைத்துல்மால்” என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் “இலங்கைப் பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 62/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— புகையிரதப் பண்டப் போக்குவரத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்,— இலங்கையில் புகையிரதச் சேவையானது பண்டப் போக்குவரத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும், இன்றளவில் புகையிரதச் சேவை அந்நோக்கத்திலிருந்து விலகியுள்ளமையாலும், பண்டங்களை புகையிரதத்தில் ஏற்றிச் செல்வது செலவு குறைந்த முறையாகக் காணப்படுவதனாலும், இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கப் பெறுவதனாலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் புகையிரதத்தின் மூலம் பண்டங்களையும், எரிபொருளையும் ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உரிய வழிமுறையொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— தமது உற்பத்திகளை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைத்தல்,— தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும்போது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையை நிர்ணயிப்பதால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாலும், இவ்வுற்பத்திகளை வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது கூடுதல் விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஒரே நேரத்தில் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் அநீதி இழைக்கப்படுகின்ற இந்நடைமுறையை மாற்றியமைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்குவதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— முன்பள்ளிக் கல்வியை ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்குதல்,— தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அனைத்து கல்வி வாய்ப்புகளிலும் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமானதும், தீர்க்கமானதுமாக காணப்படுவதால், இலங்கையின் முன்பள்ளிக் கல்வியை ஒரு நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 65/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாய மற்றும் வேறு பொருட்களை உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழைவதற்குப் போதுமானளவு வசதிகள், அறிவு மற்றும் நுழைவு வழிகள் இல்லாத காரணத்தினால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான அங்கங்களாகிய ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— உயர்தரம் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்கு இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்தல்,— இலங்கையின் பாடசாலைகளில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்காக குறித்த துறைகளுக்கு மேலதிகப் பாடமாக இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 67/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளை பராமரித்தல்,— வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் அருகிலிருந்து நாள்முழுவதும் அவர்களைப் பராமரிப்பதற்காக பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென விடுதிக்கு பொறுப்பான அலுவலர் தெரிவிப்பதாலும், அவ்வாறு பராமரிப்பாளர் ஒருவர் இல்லாதபோது கட்டணம் செலுத்தி பராமரிப்பாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அத்தகைய பராமரிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 3,500 அறவிடுவதாலும், சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறவேண்டிய நிலை ஏற்படின் அச்செலவு பெருஞ்சுமையாக இருக்கும் என்பதாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் பாதுகாப்பினையும் மற்றும் பராமரிப்பினையும், வைத்தியசாலையில் சேவையாற்றும் பராமரிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறை ஒன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— காணி உரிமப் பத்திரங்களையுடையோருக்கு, நிரந்தரக் காணி அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குதல்,— நாட்டு மக்களில் கணிசமானோர் தமது காணிகளுக்கு உரிமப் பத்திரங்கள் அல்லது ஸ்வர்ண பூமி போன்ற உறுதிகளையே கொண்டிருக்கின்றனர் என்பதால் அவர்களுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கு சரியான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நிலைபேறான இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் நிரந்தர விசேட பொருளாதார வலயம் ஒன்றினைத் தாபித்தல்,— ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயமொன்றினைத் தாபித்தலானது அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதனாலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதனாலும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்குவதனாலும், அவ்வாறான வலயங்களினைத் தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் தொழிற்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கவும், திறன் விருத்தியினை மேம்படுத்தவும் மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிக்கவும் முடியுமென்பதாலும், இதன்மூலம் வேலைவாய்ப்பின்மையினை நிவர்த்திசெய்து யாழ்ப்பாணத்திலும் வட மாகாணத்திலும் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தினை ஊக்குவிக்க முடியும் என்பதாலும், நாடு முழுவதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினை உள்ளடக்கி, யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயம் (SEZ) தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 73/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்குச் சுகாதாரத்திற்கான மிகச் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல்,— சனத்தொகையில் பெரும்பான்மையானோர் திறந்த இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்ற நிலையில், தனியார் துறை ஊழியர்களுக்கு 'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கை நிதியம்' ஆகியவற்றுக்கூடாக இலவச வசதிகள் வழங்கப்படும் வகையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது ஊழியரல்லாதோருக்கு அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தில் இருந்து செலவுக்கான முழுத் தொகையும் வழங்கப்படும் வகையிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.74/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாரத்தின் கடமை நாட்களில் பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தல்,— பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தல்,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையர்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைப்பதனால், அந்த ஒப்பந்தத்தை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— சூட்டிகை வலுசக்திக் கட்டமைப்பையும் சூட்டிகை மின் மானிகளையும் அறிமுகம் செய்தல்,— ஒரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வடிவமாக சூரிய மின்சக்தி பெறப்படுவதை ஊக்குவித்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றபோதும் குறிப்பாக, கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரியப் படல்களால் பிறப்பிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தால் வேறுபடுத்திக் கண்டறிய முடியாததால் தேசிய மின்சாரக் கட்டமைப்பை (Grid) சூட்டிகை நிலைக்கு (Smart Grid) கொண்டு வரவும் சூட்டிகை மின் மானிகளை (Smart Meters) அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.77/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— உணவுகளை சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் செயற்கைச் சுவையூட்டிகளைத் தடைசெய்தல்,— இந்த நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் ரைஸ், கொத்து மற்றும் நூடில்ஸ் போன்ற உணவுகளைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை சுவையூட்டிகள் பல்வேறுபட்ட தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றதென கூறப்படுவதால் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகளைத் தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— நீர்த்தாமரை செடியின் பரவலை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்,— நீர்த்தாமரை அல்லது Eichhornia crassipes (Mart.) Solms என்ற அறிவியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவரம், தற்போது விவசாய நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் முழுவதுமாக பரவிச் சென்றுள்ளதாலும், இதன் துரித வளர்ச்சி வேகத்தின் காரணமாக உள்நாட்டுத் தாவரங்களையும் விஞ்சி உயிரியல் சூழல் தொகுதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாலும், இதன் விளைவாக வண்டல் மண் படிந்து நீர் வழிப் பாதைகள் மற்றும் நீர் வழிந்தோடல் என்பன தடைப்படுவதனூடாக வெள்ளப் பெருக்கு நிலைமைகள் ஏற்படுவதாலும், அன்றாட பாவனைக்கு அவசியமான நீரின் தரம் மாசடைவதாலும் நீர் மின்னுற்பத்திக்கு தடையாக அமைந்துள்ளதாலும், இரசாயன களைக்கொல்லிப் பயன்பாட்டினூடாக அவற்றை அழித்தல், அந்நீரைப் பயன்படுத்தும் நபர்களுக்கு சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாலும், இதன் விளைவாக ஏற்படும் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தின் காரணமாக யானைக்கால் நோய் மற்றும் டெங்கு நோய் போன்றவை பரவி வருவதாலும், இத்தாவரத்தை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழிப்பதனூடாக நிலையான தீர்வினை வழங்கும் பொருட்டு அரசாங்கத்தினால் அதற்கேதுவான கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் காலோசிதமானதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான அளவுகோலாக பிரதான செயலாற்றுகைச் சுட்டியை பயன்படுத்துவதற்கான வழிமுறையை தயாரித்தல்,— அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நியமிப்பதில் மூப்புரிமையை கவனத்திற்கொள்வது போன்றே அவர்களின் பிரதான செயலாற்றுகைச் சுட்டியை (KPI - Key Performance Indicator) ஒரு அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்றை அரச சேவையில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்து அதற்கேற்ப நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது பிரதான செயலாற்றுகைச் சுட்டியைக் கவனத்திற் கொள்ளுதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முக்கிய செயலாற்றுகைச் சுட்டியை (KPI -Key Performance Indicator ) வருடாந்தம் மதிப்பாய்வு செய்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது அத்தகைய சுட்டிகளைப் கவனத்திற் கொண்டு பதவிகளை வழங்கும் முறையியலொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களை வேறு பதவிகளுக்கு நியமிக்கும்போது அவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல்,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அப்பதவிகளை வகித்த காலம் நிறைவடைந்த நாளிலிருந்து குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரச சேவை, நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், நியாய சபைகள் அல்லது வெளிநாட்டு சேவை (தூதுவர்கள் போன்ற) ஆகியவற்றின் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குரித்தான சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களை தமது கட்சியின் நிதியத்தில் வைப்பிலிடுவதை நிறுத்துதல்,— அரசியல் கட்சிகள் தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை அத்தகைய அரசியல் கட்சிகளுக்கே மீளப் பெற்றுக்கொள்வதானது மக்கள் பிரதிநிதிகள் தங்களது சுயாதீனதன்மையை இழக்கின்றதொரு செயற்பாடாகும் என்பதாலும், இது சனநாயகத்திற்கு கடும் சவாலாக கருதப்படுவதனாலும், இவ்வாறு அரசியல் கட்சிகளினால் மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை தமது நிதியத்தில் வைப்பிலிடுதல் கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வளிக்கும் நிலையத்தைத் தாபித்தல்,— இன்றளவில் ஹெரோயின் போன்ற போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காணப்படுவதாலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி நாடெங்கிலும் பரந்து காணப்படுவதாலும் இவர்களின் ஊடாக இவ்விடயம் மேலும் பரவி வருவதாலும், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்கள் நாட்டின் ஒருசில பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதானது போதைப் பொருள் பாவனையாளர்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது பாரிய பிரச்சினையாக மாறியிருப்பதாலும், அதற்கு தீர்வினை வழங்கும் பொருட்டு குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு புனர்வாழ்வளிப்பு நிலையமேனும் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையின் விவசாய நிலங்களை மிகவும் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துதல்,— இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியத்துவமிக்க ஒரு துறையாக விவசாயத் துறை காணப்படுவதனாலும், விவசாய நிலங்களில் சுமார் 40 %மாத்திரம் வருடாந்த உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படுவதனாலும், எஞ்சிய நிலங்கள் உரிய முறையில் திட்டமிடப்படாமை, நீர் வளப் பற்றாக்குறை, தொழிநுட்ப அறிவின்மை மற்றும் நவீனமயப்படுத்தப்படாமை ஆகியன காரணமாக பயன்படுத்தப் படாமையினாலும் உற்பத்திகளின் அளவு குறைவடைவதனால் வருடாந்தம் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது பாரிய பணத்தொகை செலவிடப்படுவதனாலும், விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியை எதிர்வரும் ஒரு சில வருடங்களில் 30% இனால் அதிகரிப்பதற்கும், இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வணிக விவசாயத்தின் பரவலாக்கத்தை அதிகரிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் சகல விவசாய நிலங்களையும் ஆய்வு செய்து நிலத்தின் வகை, பயிர்களுக்கு உகந்தநிலை, நீர் மற்றும் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை தரவுத் தொகுப்பொன்றை அமைப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாக நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள தீவுகளில் வாழும் மக்களுக்கான கடற் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாகப் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பல தசாப்தங்களாகப் போதிய கடற் போக்குவரத்து வசதிகள் கிடைக்காதவர்களாக இருப்பதாலும், அதன் விளைவாக, அவர்கள் பல மணித்தியாலங்களைக் கடற் பயணத்தில் செலவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாலும், இவ்வாறான நிலைமையில் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், பாடசாலைப் பணியாளர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி இப்பயணத்தின் போது பல அபாயநேர்வுகளை எதிர்கொள்வதாலும் “கிராமமொன்றின் அபிவிருத்தி என்பது ஒரு தேசத்தின் அபிவிருத்தியாகும்” என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதாலும் அம்மக்களுக்களுக்காக நவீன, பாதுகாப்பான, துரிதமான மற்றும் நம்பகமான கடற் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 91/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— தலைமன்னார் — ராமேஷ்வரம் படகுச் சேவையினை ஆரம்பித்தல்,— தலைமன்னார் - ராமேஷ்வரம் படகுச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்க முடியும் என்பதாலும், இதன் மூலம் பொதுமக்கள் குறைந்த செலவில் தமிழ்நாட்டுக்குப் பயணித்து, அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதை இது இயலுமாக்கும் என்பதாலும் தலைமன்னாருக்கும் ராமேஷ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையினை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 95/2025

கௌளவ நலீன் பண்டார ஜயமஹ,— தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துதல்,— மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் பொருட்டு பின்பற்றப்படும் நடைமுறை பெருமளவு ஊழல் நிறைந்ததாக மாறியிருப்பதனால், அந்நிலைமையை தடுப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 97/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— இலங்கையில் குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்பங்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்குதல்,— 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் வருடாந்த குழந்தை பிறப்பு எண்ணிக்கை தொடர்ச்சியாக விழ்ச்சியடைந்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளதாலும் இதனால் எதிர்காலத்தில் இலங்கையில் இளைஞர் சனத்தொகை நிச்சயமாக வீழ்ச்சியடையக் கூடிய வாய்ப்பு உள்ளதாலும் இளைஞர் சனத்தொகை இவ்வாறு வீழ்ச்சியடையும்போது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் பாதகமான தாக்கங்கள் ஏற்படக் கூடும் என்பதாலும் இலங்கையில் குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்ப அலகுகளை கவரக்கூடிய ஊக்குவிப்புத் தொகையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேம்படுத்துதல்,— இலங்கையில் செலவு குறைந்த மற்றும் சுற்றுச்சூழல் நேயமிக்க வலுசக்தி மூலாதாரமாக சூரிய மின்சக்தி அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், 2016.09.06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'சூர்யபல சங்ராமய' (Battle for Solar Energy) கருத்திட்டத்தின் மூலமாக தற்பொழுது 2000 இற்கும் அதிகமான மெகாவொட் சூரிய மின்சக்தி தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாலும், மின்சார அலகொன்றிற்கான விலையைக் குறைப்பதற்கான முறையியலாகவும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான மூலோபாயத் திட்டமாகவும், 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேலும் மேம்படுத்தி பாதுகாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தல்,— களுத்துறை நகரத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா வலயமொன்றை அபிவிருத்தி செய்வதற்காகவும், களுகங்கையின் கழிமுகத்தையும் கடற்கரையையும் பாதுகாக்கும் உத்தியாகவும், கெலிடோ கடற்கரை மற்றும் களுகங்கையின் கழிமுகம் மாறியதன் காரணமாக புதிதாக உருவாகியுள்ள மேட்டுநிலம் உட்பட 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயம்' நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தல்,— களுத்துறை மாவட்டத்தில், 'மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தை' (Millaniya Export Processing Zone) நிர்மாணிப்பதற்குத் தேவையான 240 ஏக்கர் காணி ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ளதாலும், அக்கருத்திட்டத்திற்காக அதிவேக நெடுஞ்சாலை நுழைவு வழிகள், குழாய் நீர் மற்றும் மின்சாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் இன்றளவில் சுமார் ஒரு பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாலும், மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட காணி மிகப் பொருத்தமானதென இலங்கை முதலீட்டுச் சபை இனங்கண்டுள்ளதாலும், அந்த ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதனை அரசாங்கத்தின் முதன்மைக் கருத்திட்டமாகக் கருதி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,—ஆங்கில மொழியில் இரண்டாம் நிலைக் கல்வி வழங்குவதை மேம்படுத்தல்,— அரசியலமைப்பின் 18(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 'ஆங்கில மொழி' இலங்கையின் இணைப்பு மொழியாக (Link Language) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாலும், சர்வதேச மொழியான 'ஆங்கில மொழி' குடிமக்களுக்கு அறிவைப் பெறுவதற்கான பிரதான மூலோபாயமாக அடையாளங் காணப்பட்டுள்ளதாலும், எந்தவொரு மொழியியல் அல்லது இனப் பாகுபாடும் இல்லாமல் ஒரு நாட்டில் வாழ்வதற்குத் தேவையான இணைப்பு மொழியாக ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் மிகவும் முக்கியமானதென்பதாலும், இலவசக் கல்வி எண்ணக்கருவின் கீழ் தோன்றிய இலங்கையின் மத்திய மகா வித்தியாலயக் கட்டமைப்பிற்குள்ளும் இன்னும் பல பாடசாலைகளிலும் ஆங்கிலத்தில் இரண்டாம் நிலைக் கல்வியை வழங்கும் முறையியல் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதாலும், இலங்கைக் குடிமக்கள் சர்வதேச வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்பது மிகவும் முக்கியமானது என்பதாலும், இலங்கையிலுள்ள அனைத்து இரண்டாம் நிலைப் பாடசாலைகளிலும் (Secondary Schools), 'ஆங்கில மொழி' மூலம் (English Medium) கல்வியை வழங்க வேண்டுமெனவும் அதற்கெனப் போதுமானளவு முதலீட்டைச் செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவுதல்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் நிர்மாணம், இயந்திரவியல், கைத்தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற் கொண்டு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/2025

கௌரவ ரோஹண பண்டார,— நீச்சல் திறமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல்,— நீரிழ் மூழ்கி உயிரிழக்கும் ஆட்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அண்மைக் காலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளதாலும், மிகச் சிறந்த நீர்ப்பாசன நாகரீகத்திற்கு உரிமைகூறும் பண்டைய கால மக்கள் மத்தியில் காணப்பட்ட நீச்சல் திறமைகளை, இன்றைய பரம்பரையினர் மத்தியிலும் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 106/2026

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை நிறுவுதல்,— இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் மருத்துவத்துறை உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற்கொண்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 108/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— தியகம வனத்தைப் பாதுகாத்தல்,— கொழும்புக்கு அருகாமையில் எஞ்சியுள்ள கடைசி நகர்ப்புறத் தாழ்நில மழைக்காடுகளில் ஒன்றாகவும் நகரத்திற்கு மிக நெருக்கமான மழைக்காட்டுப் பகுதியாகவும் தியகம வனம் காணப்படுவதனாலும்; பொல்கொட ஆற்றிற்கு நீர் வழங்கும் அதன் சதுப்பு நிலங்கள் மற்றும் நீரோடைகள் ஊடாக நீரோட்டத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இயற்கையான வெள்ளத் தடுப்பு அரணாக இது முக்கிய பங்கு வகித்து, அதன் மூலம் சுற்றியுள்ள சமூகங்களை வெள்ளப் பெருக்கிலிருந்து பாதுகாப்பதனாலும்; சிவப்பு தேவாங்கு, ஊதா முகக் குரங்கு மற்றும் கொடுபுலி போன்ற அழியும் அபாயத்திலுள்ள உயிரினங்கள் உட்பட 220 இற்கும் மேற்பட்ட தாவர மற்றும் விலங்கினங்களுக்கு இந்த வனம் வாழ்விடமாக அமைந்திருப்பதனாலும்; சுமார் 12.6% நிலப்பரப்புக்குரிய தாவர வளங்களுக்கும் 11.58% நிலப்பரப்புக்குரிய விலங்கு வளங்களுக்கும் கடைசிப் புகலிடமாக விளங்கும் ஒரு முக்கியமான பல்லுயிர் மையமாக இது திகழ்வதுடன், இவற்றில் பல விலங்குகள் நகர்ப்புற விரிவாக்கத்தினால் அதிகளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதனாலும்; தியகம வனம் அதன் தேவாங்கு இனங்களுக்காக சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதுடன் சுற்றுச்சூழல் - சுற்றுலாவுக்கான காத்திரமான சாத்தியத்தினைக் கொண்டிருப்பதனாலும்; உயிரியல் பல்வகைமை, காலநிலை மீண்டெழுந்தன்மை மற்றும் சமூகப் பாதுகாப்பைப் பேணுவதற்கு இந்த வனத்தைப் பாதுகாப்பது அவசியமானது என்பதனாலும்; தியகம வனத்தின் இழப்பானது ஈடுசெய்ய முடியாதது என்பதோடு, எதிர்கால சந்ததியினருக்காகவும் இலங்கையின் தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்காகவும்; அதன் உடனடிப் பாதுகாப்பு கட்டாயமானது என்பதனாலும் இந்தப் பாராளுமன்றம் தியகம வனப்பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் அனைத்து காடழிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (FFPA) கீழ் அதனைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டுமெனவும், அதனை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவர வேண்டுமெனவும், அத்துடன் எதிர்கால ஆக்கிரமிப்புகள் மற்றும் நிலைபேறற்ற அபிவிருத்திகளுக்கு எதிராகச் சாத்தியமான வலுவான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமெனவும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைத் தாபித்தல்,— வடக்கு கிழக்கில் சுமார் 26 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள், காணாமல்போதல் மற்றும் ஏனைய அழிவுகள் தொடர்பாக கண்டறிவதற்கும், தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய அடுத்தகட்ட நகர்வுகளை ஆராய்வதற்குமான செயன்முறைகளை வலுவூட்டுவதற்காகவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவொன்று (Truth Commission) தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.110/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— 15 வயதிற்கு குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட வழிமுறையை அறிமுகப்படுத்தல்,— மிகுதியான சமூக ஊடகப் பயன்பாடு காரணமாக சிறுவர்கள் மத்தியில் மன அழுத்தமும் மன உளைச்சலும் அதிகரித்தல், கல்விச் செயலாற்றுகையில் வீழ்ச்சி, இணையவழித் துன்புறுத்தல் (cyberbullying), நாகரிகமற்ற மற்றும் பாதுகாப்பற்ற உள்ளடக்கங்களை பார்க்க நேரிடுதல் போன்ற சிக்கல்கள் அதிகரித்து வருவதாலும், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், டென்மார்க் போன்ற வளர்ச்சி அடைந்துள்ள நாடுகள் சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை ஏற்கெனவே அறிமுகம் செய்துள்ளதாலும், சிறுவர்களின் உள ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் கல்விசார் வளர்ச்சியைப் பேணுவதற்காக சமூக ஊடக கணக்குகளைத் திறப்பதற்கான ஆகக்குறைந்த வயதாக 15 வயதை நிர்ணயித்தல், சமூக ஊடகக் கம்பனிகளுக்கு வயது மெய்யுறுதிப்படுத்தலை கட்டாயமாக்குதல், சட்டத்தை மீறுகின்ற நிறுவனங்கள் மீது அபராதம் விதித்தல் மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல், வயது வந்தவர்களின் கணக்குகளைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களை உசாவும் சிறுவர்கள் குறித்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற நகர்வுகளை முன்னெடுப்பதற்காக 15 வயதிலும் குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட ரீதியான வழிமுறையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 112/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல்,— நீண்டகாலத் தன்னிச்சையான தடுத்துவைப்புகளை இயலுமாக்குவதற்கும் சித்திரவதைகள் மூலம் போலி வாக்குமூலங்களைப் பெறுவதற்கும் சிறுபான்மைச் சமூகங்களையும் சிவில் சமூகக் குழுக்களையும் இலக்கு வைப்பதற்கும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாலும், அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படலாம் என்பதாலும், பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் ஏற்கனவே தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் வழக்குத் தொடரப்படக்கூடியவையாக இருப்பதாலும், பாரிய அதிகாரங்களைக் கொண்ட நிரந்தரமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றுக்கான நியாயப்படுத்தல்கள் எவையும் இல்லையென்பதாலும், இதேபோன்ற ஏற்பாடுகளைக் கொண்ட எந்தவொரு பதிலீட்டுச் சட்டவாக்கத்தினையும் அறிமுகப்படுத்தாமல், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 113/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரிவென ஆசிரியர்களின் ஓய்வூதியத்திற்காக அவர்களின் ஊதியத்திலிருந்து கூடுதலாக ஆறு சதவீதத் தொகையை அறவிடுவதை நிறுத்துதல்,— நவீன பாடசாலைக் கல்வி முறையை போன்றே பாரம்பரியக் கல்வி முறையான பிரிவென கல்வி முறையும் இலங்கையில் நடைமுறையிலுள்ள பிரதான கல்வி முறையாக காணப்படுவதாலும், நவீன பாடசாலைக் கல்வி முறையில் அதன் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கிடைக்கும் சலுகைகளும் அங்கீகாரமும் பிரிவென கல்விக்கு அல்லது அதன் ஆசிரியர்கள் மற்றும் பிக்கு மாணவர்கள், பொதுநிலை மாணவர்கள் ஆகிய இரு தரப்புக்கும் உள்ளபடியே கிடைப்பதில்லை என்பதாலும், பிரிவென கல்வியுடன் தொடர்புடைய ஒரு முக்கிய அம்சம் என்ற வகையில் பிரிவென ஆசிரியர்களின் ஓய்வூதியத்திற்காக அவர்களின் ஊதியத்திலிருந்து கூடுதலாக ஆறு சதவீதத் தொகை அறிவிடுவதை 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01ஆம் திகதியிலிருந்து நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 114/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலகச் சுற்றாடலைப் பாதுகாத்தல்,— உலகச் சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பில் இலங்கை அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும், குறிப்பாகப் புவி வெப்பமடைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 115/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட வைப்பாளர்களின் நிதியை மீளச் செலுத்துதல்,— பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் நிதியை வைப்புச் செய்த பெருமளவிலான வைப்பாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதால் அவ்வாறு அக்கம்பனிகளில் வைப்புச் செய்தவர்களுக்கு அந்த நிதியை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் இக்கம்பனிகளின் பாதுகாவலர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி இது தொடர்பில் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 116/2026

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச வைத்தியசாலைகள் கட்டமைப்பின் வெளிநோயாளர் பிரிவுகளில் நிலவுகின்ற நெருக்கடியைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— உலக சுகாதாரச் சுட்டிகளின் தரவரிசைப்படுத்தலில் எமது நாடு எந்த இடத்தில் காணப்பட்ட போதிலும், அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளில் காணப்படுகின்ற பாரிய நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 117/2026

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— யானை - மனித மோதல்கள் அதிகமாக இடம்பெறுகின்ற பிரதேசங்களில் தேனீ வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— புள்ளிவிபரத் தரவுகளுக்கமைவாக யானை – மனித மோதல்கள் அதிகமாகக் காணப்படுகின்ற ஒரு நாடாக இலங்கை தற்போது மாறியுள்ளதாலும், அதன் காரணமாக வருடாந்தம் அதிக எண்ணிக்கையிலான மனிதர்கள் மற்றும் யானைகள் உயிரிழப்பதாலும், சொத்துக்கள் உட்பட பௌதிக வளங்கள் அழிவடைவதாலும், இந் நிலைமையினைத் தடுப்பதற்கானதொரு முன்னோடிக் கருத்திட்டமாக கென்யா போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுவதைப் போன்று, யானை – மனித மோதல்கள் இடம்பெறுகின்ற பிரதேசங்களில் தேனீ வளர்ப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 119/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் பணியாற்றுகின்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி முறையான தங்குமிட வசதிகள் அல்லது அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை நிறுவுதல்,— யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு பல சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களினதும் ஆசிரியர்களினதும் போக்குவரத்து நெருக்கடிகள் மற்றும் தங்குமிட பிரச்சினைகளுக்கு நிலையானதொரு தீர்வினை வழங்குதல் மற்றும் அவர்களின் சேவையை வினைத்திறனாக பெற்றுக் கொள்வதனை உறுதி செய்வதற்காக, அந்தந்த மாவட்டங்களில் மையப்படுத்திய ஒரு பிரதேசத்தில் அல்லது பொருத்தமான ஓரிடத்தில் சகல வசதிகளுடன் கூடிய முறையான தங்குமிட வசதிகளைக் கொண்ட அல்லது அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை அரசாங்கம் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.120/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— இலங்கையின் கடல்சார் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும், கடல் சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுத்திர பல்கலைக்கழகமொன்றைத் (Ocean University) தாபித்தல்,— இலங்கையைச் சூழவுள்ள ஆழ்கடல் மற்றும் கரையோரக் கடல் வளங்களை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக கையாள்வதற்குத் தேவையான மனித வளங்களை உருவாக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்பதால், வட மாகாணத்தில் அதிகளவான கடல்சார் ஆற்றல் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கும், இளைஞர் யுவதிகளுக்கு கடல்சார் பொறியியல், கடல்சார் ஆய்வு மற்றும் நீரியல் வள முகாமைத்துவம் போன்ற துறைகளில் உயர்கல்வி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும், அனைத்து வசதிகளுடன் கூடிய சமுத்திர பல்கலைக்கழகமொன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 121/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களிலும் கரையோரக் கிராமங்களிலும் நிலவுகின்ற கடுமையான குடிநீர் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வாக கடல்நீர் சுத்திகரிப்பு கருத்திட்டங்களை (Desalination Plants) விரிவாக்குதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களில் நிலத்தடி நீரானது உவர் நீராக மாற்றமடைந்து வருவதனாலும், குறிப்பாக வேலணை மற்றும் நயினாதீவு ஆகிய தீவகப் பகுதிகளில் பொதுமக்கள் குடிநீர் வசதிகளைப் பெறுவதில் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதனாலும், ஏற்கனவே நயினாதீவு போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்கும், குறிகட்டுவான் ஊடாக குழாய் நீர் வழங்கல் கருத்திட்டத்தை துரிதப்படுத்துவதன் மூலம் மக்களின் அடிப்படைத் தேவையாகிய சுத்தமான குடிநீரை இப்பிரதேச மக்களுக்கும் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு கடல்நீர் சுத்திகரிப்புக் கருத்திட்டங்களை விரிவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 122/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாண இளைஞர்களிடையே வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட செயலணியொன்றைத் தாபித்தலும் நவீன புனர்வாழ்வு நிலையங்களை அமைத்தலும்,— அண்மைக் காலமாக வட மாகாணத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் தீத்தொழில் மற்றும் போதைப்பொருள் பாவனை காரணமாக சமூகக் கட்டமைப்பானது நலிவுற்றுள்ளதோடு பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்திற்கும் பாதிப்பை ஏற்படுவதாலும், போதைப்பொருள் விநியோக வலையமைப்பை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினரின் ஒருங்கிணைப்புடன் கூடிய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான விசேட செயலணியொன்றைத் தாபிப்பதற்கும், போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்காக வட மாகாணத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய அரச புனர்வாழ்வு மற்றும் ஆலோசனை நிலையங்களை அமைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 123/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தில் பனை மற்றும் தென்னை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிக் கைத்தொழிற்சாலைகளை நிறுவி வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்,— வடக்கு மாகாணத்தில் பெருமளவில் காணப்படுகின்ற பனை மற்றும் தென்னை ஆகியவற்றை வெறும் மூலப்பொருட்களாக மாத்திரம் பயன்படுத்தாது, நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளாக உற்பத்திச் செய்யும் ஏற்றுமதிக் கைத்தொழிற்சாலைகளை அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் மாவட்ட மட்டத்தில் நிறுவுவதற்கும், அதன் மூலம் அப்பிரதேசங்களில் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் மற்றும் பட்டதாரிகளின் வாழ்வாதார வழிகளைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 124/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவித்தலும் விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அக்காணிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குதலும்,— யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றச் செயன்முறையின் போது, பொதுமக்களின் காணிகள் இதுவரை முழுமையாக விடுவிக்கப்படாதிருப்பதினாலும், அதன் காரணமாக அவர்கள் தமது பாரம்பரிய விவசாய நடவடிக்கைகளிலும் மீன்பிடித் தொழிலிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை இழந்துள்ளதனாலும், இதுவரை விடுவிக்கப்படாதுள்ள பொதுமக்களின் எஞ்சிய காணிகளை, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் துரிதமாக விடுவிப்பதற்கும், பொதுமக்களின் வாழ்வாதார வழிகளை மீண்டும் கட்டியெழுப்பும் விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக மேற்படி காணிகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 125/2026

கௌரவ நந்த பண்டார,— மலைப்பாங்கான பிரதேசங்களில் உணவுப் பயிர்களைப் பயிரிடுதல்,— 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இலங்கைக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்திய ‘தித்வா சூறாவளி’ காரணமாக கேகாலை, கண்டி, மாத்தளை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களின் மலைசார்ந்த பிரதேசங்கள் பெருமளவில் மண்சரிவுக்கு உள்ளாகியிருப்பதாலும், தற்போது இலங்கையின் பெரும்பாலான மாவட்டங்களில் குரங்கு, மந்தி, மர அணில் போன்ற வனவிலங்குகளால் பயிர்களுக்குச் சேதங்கள் ஏற்படுகின்றமையினாலும், இவ்வனவிலங்குகளின் உணவுத் தேவைக்காகவும், சுற்றாடல் சமநிலையைப் பாதுகாப்பதற்கும், மண்ணரிப்பைத் தடுப்பதற்கும், மேற்படி மண்சரிவுக்குள்ளாகியுள்ள மலைப்பாங்கான பிரதேசங்களில் பலா, மா, ஈரப்பலா, காட்டுமா போன்ற உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 126/2026

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— கித்துள் கைத்தொழிற்றுறையை முன்னேற்றுதல்,— யுனெஸ்கோ அமைப்பு, இலங்கையின் கித்துள் வடித்தல் தொழில்நுட்பத்தினை உலக பாரம்பரியமாக பெயரிட்டுள்ளதனூடாக எமது நாட்டைப் பற்றிய கௌரவம் உலகத்தின் முன்னிலையில் உயர்ந்துள்ள காரணத்தினாலும், காலி, மாத்தறை, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, பதுளை, கம்பஹா உள்ளிட்ட மேலும் பல மாவட்டங்களில் மிகவும் கடினமான சூழ்நிலையிலும் இந்த பாரம்பரிய கித்துள் சார்ந்த கைத்தொழிலைப் பாதுகாத்தவாறு சுமார் ஆயிரக்கணக்கான கைத்தொழிலாளர்கள் இத்தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளமையினாலும், இந்தக் கைத்தொழிலை முன்னேறி வரும் சுற்றுலாத் துறையுடன் ஒன்றிணைப்பதற்கும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கிராமிய சாதாரண மக்களது பொருளாதார முன்னேற்றத்திற்கான புதியதொரு பாதையை அமைப்பதற்கும், கித்துள் கைத்தொழிற்றுறையின் நீண்டகால பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் பொருத்தமான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 128/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தின் வன்னி மற்றும் யாழ்ப்பாணத் தீவகப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியப் பற்றாக்குறை மற்றும் டிஜிட்டல் கல்விசார் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல்,— வன்னி மற்றும் யாழ்ப்பாணத் தீவகப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை மாவட்ட ரீதியிலான நியமனங்களின் மூலம் நிரப்புவதற்கும், அப்பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் பொருட்டு நவீன கணினி ஆய்வுக்கூடங்கள் மற்றும் முறையான இணைய வசதிகளை ஏற்படுத்துவதற்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மேலதிக கல்வி வாய்ப்புகளை வழங்கும் வகையில் சிறப்பு உதவித்தொகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 129/2026

கௌரவ ரீ. கே. ஜயசுந்தர,— இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில்களை மேம்படுத்துதல்,— மூங்கில், பிரம்பு, கோரை, கித்துள் போன்ற தாவரங்களின் தண்டுகள், போலித்தண்டுகள் மற்றும் இலைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பாரம்பரிய கைத்தொழில்கள் மூலம், இலங்கையின் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கமுடியும் என்பதாலும், இலங்கையின் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறைகளில் தற்போது ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சிக்கு இணையாக அத்தகைய பாரம்பரிய கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பத்தை வழங்குவதற்கும், அவற்றின் உற்பத்திக்கான சந்தையை விரிவுபடுத்துவதற்கும், அவற்றிற்கு உத்தியோகபூர்வமாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும், பாரிய அளவிலான கைத்தொழில்களை உருவாக்குவதற்காக மேற்படி தாவரச் செய்கைகளை ஊக்குவிப்பதற்கும், அதற்கான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும், அக்கைவினைஞர்களின் உழைப்பிற்கும், திறமைக்கும் உயர்ந்த மதிப்பளிக்கவும், அவர்களின் ஓய்வுகால வாழ்க்கையைப் பாதுகாக்கும் திட்டமொன்றை உருவாக்கவும் தேவையான செயற்பாட்டுப் பொறிமுறை ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 130/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— புத்தளம் புகையிரதப் பாதையில் புகையிரத சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் எரிபொருள் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், பொதுமக்கள் பெருமளவில் பொதுப் போக்குவரத்து சேவைகளை நாடும் போக்கு காணப்படுவதாலும், அத்துடன் தினமும் பெருமளவானோர் தொழில் நிமித்தமாகவும் வர்த்தக தேவைகளுக்காகவும் புத்தளம் பாதையில் பயணம் செய்வதாலும், அப்பயணிகளுக்கு போதுமான சேவையை வழங்கும் நோக்கில் புத்தளம் கொழும்பிற்கிடையிலான புகையிரத சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 131/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பொது இடங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் சூரிய சக்தியினால் இயங்கும் மின்னேற்ற அலகுகளைப் பொருத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— மின்சாரத்தினால் மாத்திரம் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பயன்பாடு தற்பொழுது மக்களிடையே பிரபலமடைந்துள்ளதாலும், அது சுற்றாடல் மாசடைவதைக் குறைப்பதற்கு மிகவும் முக்கியமானதொரு நடவடிக்கையாக அமைவதாலும், தற்பொழுது நிலவும் அதிகளவிலான எரிபொருள் நுகர்வுக்கு ஒரு தீர்வாகவும் எரிபொருளுக்காகச் செலவிடப்படும் அதிக செலவினத்திற்குப் பொருத்தமானதொரு தீர்வாகவும் அமைவதாலும், மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பயன்பாடு காரணமாக மின்சார பயன்பாடு அதிகரிக்கக்கூடும் என்பதாலும், ஏதேனும் மின்துண்டிப்பு ஏற்படுமாயின் அவற்றை உபயோகிக்கும் மக்கள் கடுமையான அசௌகரியங்களுக்கு உள்ளாவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளதாலும், மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்தும் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காகவும் மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் மூலம் தூரப் பிரயாணங்களை மேற்கொள்ளும் மக்களின் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் மின்கலங்களை மின்னேற்றம் செய்துகொள்வதற்கான வசதிக்காகவும் பொது இடங்களிலும் அரசாங்க நிறுவனங்களின் வளாகங்களிலும் சூரிய சக்தியினால் இயங்கும் மின்னேற்ற அலகுகளைப் (Solar Charging Points) பொருத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, செப்தெம்பர் 11, வெள்ளிக்கிழமை)**

896 /2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலகப் பிரிவில் ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

897/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற ‘அளிப்புப் பத்திரம்’ அல்லது ‘காணி உரிமம்’ இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், கோறளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(v) உரிய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?